# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
# EA No. 01/2023 in EP No.12/2022

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05–ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 05.09.2023 | தந்தை/கணவர் பெயர்: | கோபால்சாமி |
| பெயர்: | சுரேஷ் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நெய்வேலி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 52 /2023 |
| தொழில்: | | | |

<u>முதல் விசாரணை : 05.09.2023.</u>

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

அசல் வழக்கு எண்.261/2012–ல் நீதிமன்ற ஆணையர், நில அளவையரின் அறிக்கையுடன் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது முறையே ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.